

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூபாய் 2.00 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு கூடம் கட்டிடத்திற்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, நகர செயலாளர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், பேரூராட்சி தலைவர் ராயல் எஸ்.அன்பு, ஒன்றிய குழு துணை தலைவர் பி.மணிவண்ணன், நகர மன்ற துணை தலைவர் குணா, பேரூராட்சி துணை தலைவர் கதீஜா பீபி, மாவட்ட சிறுபான்மையினர் அணி தலைவர் அக்பர் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் 2021–2022 முதல் 2025–2026 வரை இத்துறை தொடர்பான முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், நிதிநிலை அறிவிப்புகள் மற்றும் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி வே.அமுதவல்லி, கைத்தறி துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திருமதி இரா. லலிதா, கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கிரிக்கெட் வரலாற்றில் எம்.எஸ். தோனியின் பயணம்

# பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது!

## ‘ஹால் ஆப் ஃபேம்’ வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூன் 11-**

**கிரிக்கெட் வரலாற்றில் எம்.எஸ். தோனியின் பயணம் பொன்னெழுத்துக்களால் தற்போது பொறிக்கப்பட்டுள்ளது என்று அவர் ‘ஹால் ஆப் ஃபேம் வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

ஐ.சி.சி.யின் பெருமைமிகு ‘ஹால் ஆஃப் ஃபேம்’ வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக மகேந்திர சிங் தோனி அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



ஐ.சி.சி.யின் பெருமைமிகு ‘ஹால் ஆஃப் ஃபேம்’ வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக மகேந்திர சிங் தோனி அவர்களுக்கு என் வாழ்த்துகள்!

ஒருநாள் போட்டிகளில் அதிக எண்ணிக்கையில் இந்தியாவுக்குத் தலைமை தாங்கியது தொடங்கி, அதிக ஸ்டம்பிங் செய்தவர் என்ற சாதனை படைத்து, அனைத்து ஐ.சி.சி. கோப்பைகளையும் வென்ற ஒரே கேப்டன் என்பது முதல் சென்னை அணியை 5 முறை ஐ.பி.எல். கோப்பையையும், இருமுறை சாம்பியன்ஸ் லீக் தொடரிலும் வெற்றிபெறச் செய்தது வரை நீங்கள் உயர்சிறப்பான கிரிக்கெட் மரபைக் கட்டியெழுப்பியுள்ளீர்கள்.

உங்களின் நிதானத்தால் தலைமைத்துவத்தின் வரையறையையே மாற்றியமைத்தீர்கள்! விக்கெட்கீப்பிங் என்பதை ஒரு கலைநேர்த்தியாக மாற்றிக் காட்டினீர்கள்! ஒரு தலைமுறையையே உங்களது தெளிவாலும் உறுதியாலும் ஊக்குவித்துள்ளீர்கள்.

உங்களது பயணம் கிரிக்கெட் வரலாற்றில் தற்போது பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளது. எப்போதுமே ‘Thala For a Reason’ என்ற புகழுரை ஓயாது;

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தென்பாண்டிச் சிங்கம்

# வாளுக்கு வேலி அம்பலம் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பாராட்டு!

**சென்னை, ஜூன் 11-**

**‘தென்பாண்டிச் சிங்கம்’ வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

விடுதலை வீரர்களைப் போற்றி வணங்கும் அரசாக ‘தென்பாண்டிச் சிங்கம்’ வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவித்துக் கொண்டாடி வருவதுடன், இந்த ஆண்டு ஜனவரி மாதம்தான் சிவகங்கை மாவட்டம் நகரம்பட்டியில் அவரது முழுவுருவ வெண்கலச் சிலையினைத் திறந்து வைத்தேன்!

வீரத்தின் விளைநிலமான சிவகங்கைச் சீமையின் மைந்தனாக அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் மானம் காத்த மருதிருவரோடு இணைந்து போரிட்ட வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்தநாளில், அவருக்கு என் வீரவணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், ஜூன் 11 -

கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் இன்று (11.06.2025 - புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும்,



கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணிச் செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்க, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ண ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாம சுந்தரி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :**

1. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி ‘ஓரணியில் தமிழ்நாடு’ - உறுப்பினர் சேர்க்கை குறித்து.

2. கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஜெயங்கொண்டத்தில நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

அரியலூர், ஜூன் 11 –

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம், இடையார் கிராமத்தில், அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில்,கிராம கோவில்களின் 56 பூசாரிகளுக்கு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் ச.சி.சிவசங்கர் வழங்கினார். இந்நிகழ்வில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணி யன்,மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் தன.சேகர்,

ஆண்டிமடம் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள், ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளர் கணேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 ஆவது பிறந்தநாள் விழா!

# நல்லூர் வடக்கு ஒன்றியத்தில் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டம்!

## தலைமைக் கழக பேச்சாளர் ஆரணி மாலா சிறப்புரை!

கடலூர், ஜூன் 11-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு நல்லூர் வடக்கு ஒன்றியத்தில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் நான் காண்டு கால சாதனைகளை விளக்கும் வகையில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களின் ஆலோசனைப்படி நல்லூர் வடக்கு ஒன்றியம் வேப்பூர், சேப்பாக்கம், நல்லூர் ஆகிய ஊர்களில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் 09.06.2025 திங்கள்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் ஆரணி மாலா கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் ஒன்றிய துணை செயலாளர்கள் பூலாம்பாடி டி. அண்ணாதுரை நாரையூர் மாரிமுத்தாள் குணசேகரன் நல்லூர் அன்பு குமரன் ஒன்றிய பொருளாளர் சேப்பாக்கம் ஜி.வெங்கடாசலம் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாரையூர் துரை.கருப்புசாமி முன்னாள் மாவட்ட கவுன்சிலர் நகர். சக்திவிநாயகம் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கொத்தனூர். கே ரகுநாதன் ஓட்டுனர் அணி அமைப்பாளர் பெ.சசி குமார் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் வ.குணசேகரன் மகளிர் அணி அமைப்பாளர் இராஜேஸ்வரி உள்ளிட்ட ஒன்றியக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அந்தந்த ஊர் கிளைக் கழக செயலாளர்கள் வரவேற்புரை மற்றும் நன்றியுரை ஆற்றினார்கள்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம்-12**

ம. அ. 12. ந. க. எண். இ1 / 2107 / 2025

**குறுகிய கால மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

**மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / மண்டலம் - 12 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.**

மண்டலம்-12 - பகுதி-37- வார்டு-165 நங்கநல்லூர் ராம் நகர் 2வது பிரதான சாலை, புதிய நிழற்கூடம் **(Shelter)** அமைக்கும் பணி (சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி)

| | |
|---|---|
| பணியின் தோராய மதிப்பு ரூ. **78,24,008.41** | பணியின் முன்வைப்பு தொகை: ரூ.**79,000/-** |

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **20.06.2025** அன்று மாலை **3.00 P.M.** மணி வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **23.06.2025** அன்று மாலை **3.30 P.M.** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 2897 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / ம- 12**


### கர்நாடக மாநில கழக இலக்கிய அணி

# வன்னி மு.கோபால் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

பெங்களூரு, ஜூன் 11-

கர்நாடக மாநில தி.மு.க. மூத்த தலைவர்களில் ஒருவரும், மாநில கழக இலக்கிய அணி நிர்வாகியும், சிறந்த கவிஞர், எழுத்தாளர், மேடை பேச்சாளருமான




வன்னி மு.கோபாால் அவர்கள் (வயது 84) உடல் நலக் குறைவால் நேற்று (10.06.2025-செவ்வாய்) காலை பெங்களூருவில் உள்ள தனது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு 3 மகள்களும் ஒரு மகனும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கர்நாடக மாநிலக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (10.06.2025) மாலை 4 மணியளவில் நடைபெற்றது.


இறுதி ஊர்வலத்திலும் கழகத்தினர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.



புதுச்சேரி முன்னாள் முதல்வர் ஆர்.வி.ஜானகிராமனின் 6ம் ஆண்டு நினைவு தினம் ஆம்பூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் அனுசரிக்கப்பட்டது. இதில் மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா தலைமையில், கழகத்தினர் கலந்துகொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஆர்.வி.ஜானகிராமன் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் மாநில அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார், துணை அமைப்பாளர் அனிபால் கென்னடி எம்.எல்.ஏ, பொருளாளர் செந்தில்குமார் எம்.எல்.ஏ, இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத் எம்.எல்.ஏ. மற்றும் மாநில கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிவாகிகள் கலந்துகொண்டனர்.



வேலூர் மாநகரம் மக்கான் அம்பேத்கர் நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட வகுப்பறையை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாமன்ற உறுப்பினர் காஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, பகுதி செயலாளர்கள் ஜி.பாலமுரளி கிருஷ்ணா, பி.முருகப்பெருமாள், மாநகர சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் காலப்பாஎன்ற அப்துல் மஜீத், கிருஷ்ணமூர்த்தி, துரையரசன் மற்றும் கழக நிர்வாகிகள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம், பண்ருட்டியில் நடைபெற்ற விழுப்புரம் மத்திய மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் அ.ரீகன்ராஜ் கா.கோகுலப்பிரியா ஆகியோரின் திருமண விழாவில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் முனைவர் சி.பிரதீப் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.உடன் விழுப்புரம் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் புகழ் செல்வகுமார், சுரேஷ், வி.கே.மூர்த்தி,துரை ஸ்டாலின் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.